1973 மார்ச் 30]

களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சியாளரால் அண்மையில் அனுமதிக்கப்பட்டு, வேலை துவங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது சிமென்ட் இல்லாத காரணத்தால் வேலை நடைபெறவில்லை. ஆகவே, இதற்கான மொத்தத் தொகையையும் ஒதுக்கி, இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த இல்லங்களைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, வேளாண்மை மானியத்திலே இருந்து ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் வழங்கப்படுகிற ரூ. 1,000ஐக் கொண்டு, மாவட்டக் கலெக்டர் அந்த பல ஒன்றியங்களிலே, எந்த ஒன்றியத்திற்குச் செய்வது என்பதை மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே தீர்மானித்து, ஏதாவது ஒரு இடத்திலே செய்கிறார். ஆனால், அரசு அப்படிப்பட்ட காரியத்தை, வீடுகள் கட்டுவதை இப்பொழுது செய்ய முடியவில்லையென்று கைவிட்டிருக்கிறது.

கோவை தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைக்கு வல்லுநர்கள்

*575 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை E.S.I. மருத்துவ மனையில் போதிய (Specialists) மருத்துவ அதிகாரிகள் நியமிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கோயம்புத்தூர் E.S.I. மருத்துவமனையிலுள்ள பல்வேறு சிறப்புப் பிரிவுகளிலும் தேவையான மருத்துவ வல்லுநர்களை அரசு நியமித்துள்ளது. தற்போது, 14—3—1973 வரை,

1. மருத்துவ இயல் பிரிவு	3
2. அறுவை மருத்துவம்	3

[1973 மார்ச் 30

3.	மகப்பேறு மகளிர் நோய் இயல்	3
4.	உருக்கி நோய் மருத்துவம்	3
5.	சிசு நோய் மருத்துவம்	2
6.	கதிர் வீச்சு	2
7.	கண் நோய்	1
8.	காது, மூக்கு, தொண்டை நோய்	1
9.	தோல் நோய் மருத்துவம்	1
10.	நோய் குறியியல்	1
11.	முடவியல் மருத்துவம்	1

ஆக மொத்தம் 21 மருத்துவ வல்லுநர்கள் இம்மருத்துவ மனையில் பணியாற்றி வருகிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கை கால் முறிவு, ப்ராக்ச்சர் சம்பந்தமானவற்றிற்கு, 'ஆர்த்தோபீடிக்ஸ் ஸ்பெஷலிஸ்ட்ஸ்' நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையென்றால், அதற்கு உண்டான வழியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். வேறு சில ஸ்பெஷலிஸ்ட்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பல நேரங்களிலே, அவர்கள் லீவிலே போகும்போது, மற்றும் அம்மாதிரிச் சந்தர்ப்பங்களிலே அந்த உதவி கிடைப்பதில்லை. அந்தமாதிரி நேரங்களில், சி.எம்.சி. மருத்துவமனை ஸ்பெஷலிஸ்ட்டை அங்கு அனுப்ப வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தைக் கவனத்தில்கொண்டு சந்தர்ப்பம் ஏற்பட்டால், அது பரிசீலிக்கப்படும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : கோவையிலே இருக்கிற அந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையிலே அதற்காக ஸ்பெஷலிஸ்ட்ஸ் இருந்தும், உள்ளிருப்பு நோயாளிகள் அதிகம் வருவதில்லையென்று சொல்கிறார்கள். எப்பொழுதும் அதிகப் படுக்கைகள் காலியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால், பொதுமக்கள் அவற்றைப் பயன்படுத்துகிற அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 30]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த விவரத்தை உறுப்பினரே தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப் படும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பொது மக்கள் அதைப் பயன்படுத்தவே முடியாது. அது, தொழிலாளர்களில் இன்ஷூரன்ஸ் செய்து கொண்டவர்களுக்கு மட்டும்தான். அங்கே அனுமதிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட, அதிகமான எண்ணிக்கைகொண்ட படுக்கைகள் இருப்பதாக, ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் கருதுவதால், சில படுக்கைகளைப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. எல்லாப் படுக்கைகளையும் பயன்படுத்த அனுமதி தரவேண்டுமென்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனைக் கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதி கிடைத்தால் மற்றப் படுக்கைகளும் பயன்படுத்தப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒரு தவறான கருத்தை டாக்டர் தருவதனால்தான் சொல்கிறேன். அங்கே படுக்கைகளுக்கு ஆள் வருவதில்லையென்று கூறுகிறார்கள். அதுசரியல்ல, அங்கே படுக்கைகள் போதாது என்ற குறைதான் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அங்கே ஏறத்தாழ 550 அல்லது 600 படுக்கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனால் அனுமதிக்கப்பட்டிருக்கிற படுக்கைகள் ஏறத்தாழ 400 அல்லது 420. ஆகவே, மேலும் ஏறத்தாழ 100 அல்லது 120 படுக்கைகளைப் பயன்படுத்த ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் அனுமதிக்காத காரணத்தால், அவை பயன் படுத்த முடியாத கட்டத்தில் இருக்கின்றன.

பீடித் தொழிலுக்கு வருங்கால வைப்பு நிதித் திட்டம்

*576 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு Provident Fund Insurance திட்டம் கொண்டுவரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?